[1980 ஜூலை 17

*கு. க. வி. எண். 22—

தமிழ் இலக்கியத்தில் பட்டப் படிப்பு.

திரு. மி. வின்சென்ட்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பரா: —

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கல்லூரிகளிலும் தமிழ் இலக்கியப் பாடம் (B. A. தமிழ்ப் பட்டப் படிப்பு) தொடங்க அரசு முயற்சி ஏதும் எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தமிழ் இலக்கியத்தில் பட்டப் படிப்பு வகுப்புக்கள் 38 தனியார் கல்லூரிகளிலும், 26 அரசினர் கலைக் கல்லூரிகளிலும் உள்ளன. இது தவிர 1980–81-ல் 7 (ஏழு) தனியார் கல்லூரிகளிலும் 4 (நான்கு) அரசினர் கலைக் கல்லூரிகளிலும் தமிழ் இலக்கியப் பட்டப் படிப்பு துவங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. மற்றும் அப்பட்டப் படிப்பு இல்லாத கல்லூரிகளில் உள்ள இதர வசதிகள், சாத்திய கூறுகள், நிதி வசதிகளைப் பொறுத்து அரசு செயற்படும்.

திரு. மி. வின்சென்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரிகளில் அரசாங்க அனுமதி வழங்குவதற்கு விண்ணப்பிக்கும் போது, தமிழ் பட்டப்படிப்பு துவங்குவதை விட்டு, மற்றைய பட்டப் படிப்புகளுக்கு மட்டும் அனுமதி கோரி விண்ணப்பிக்கும் தமிழ் பற்றற்ற கல்லூரி முதல்வர்களை இந்த அரசு தண்டிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் பட்டப் படிப்பைத் தீவிரமாக செயல் படுத்த இந்த அரசு முயற்சி எடுத்துக் கொள்ளும்.

திரு. மி. வின்சென்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரிகளில் 5 ஆண்டு தமிழ் பட்டப்படிப்பு கட்டாயம் இருந்தாக வேண்டும் என்ற ஆணையை இட அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, அது தேவையில்லாத ஒன்று.

திரு. என். பழனிவேல்: பேரவைத் தலைவர் அவர்களே, பட்டப்படிப்பு முடித்த எம். ஏ, மாணவர்கள் ஒரு 50 பேர்கள் 4 ஆண்டுக் காலமாக வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர் களுக்கெல்லாம் மேல்நிலைப் பள்ளிகளில் சமூகம், விஞ்ஞானம் போன்ற பாடங்களுக்கு ஆசிரியர்களாக நியமித்து வேலைவாய்ப் பளிக்க அரசு முன் வருமா? அதைச் செய்யாமல் வேறு ஆசிரியர்களை போடுவதினால், இவர்கள் நீண்டகாலமாக வேலை யில்லாமல் இருக்கும் நிலை நீடிக்கிறது. ஆகவே அந்தப் பாடங் களுக்கு இவர்களை ஆசிரியர்களாக நியமிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம். தலைவர் அவர்களே, மூலக்கேள்விக்கு தொடர்பில்லை என்றாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் இந்த யோசனையை அரசு பரிசீலிக்கும்.

திரு. து. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் பயிற்றுவிக்க முக்கியத்துவம் கொடுக்கிற இந்த அரசு தமிழ் படித்து பல்லாண்டுக் காலமாக வேலையில்லாது இருக்கிற புலவர்களுக்கு வேலை கொடுக்க முன் வருமா என்று கேட்க விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு தனிக்கேள்வி போட்டால் விடை தயாரித்துக் கொடுக்கப்படும்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, தமிழ் இலக்கியத்தைப் பாடமாக எடுத்துக் கொண்டிருக்கிற மாணவர்களுக்கு அரசு உதவித் தொகை ஏதேனும் வழங்குகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்களே விரும்பி படிக்கிறபோது அதற்கென்று விசேஷத் தொகையை அரசு தர வேண்டியது இல்லை.

நொய்யல் ஆறு திட்டம்.

கு.கா.வி. எண். 23—

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) நொய்யல் ஆறு திட்டம் இப்பொழுது எந்த நிலையில் உள்ளது?

(ஆ) உடனடியாக ஆரம்பிக்கும் திட்டம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது எப்பொழுது முற்றுப்பெறும்

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ, ஆ, இ) நொய்யல் அணைத் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளது.

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தினால் பயன் பெறுகிற நஞ்சை நிலம் எவ்வளவு? புஞ்சை நிலம் எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தில் கரூர் வட்டத்தில் ஆத்துப்பாளையம் அருகே 235·35 மில்லியன் கன அடி கொள்ளளவு கொண்ட அணை ஒன்றும், இரு வாய்க்கால்களும் இந்தத் திட்டத்தில் அடங்குகிறது. இதனால் கரூர் வட்டத்தில் 9,625 ஏக்கர் பரப்பளவு கொண்ட ஆயக்கட்டின் ஒரு போக பாசனப் புன்செய் பயிர்களுக்குத் தண்ணீர் அளிக்க இந்தத் திட்டம் வகை செய்கிறது.